1990 மே 3]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கருத்துருவில் உள்ளது என்பதைத் தெரிவித்த பிறகும் உடனடியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். தேசிய பால் வள நிறுவனத்தின் மூலம் 3-வது பால் பெருக்குத் திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்து நடவடிக்கை எடுக்கும்போது அதில் மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையமும் அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. முல்லைவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தைப் புதிதாக துவங்க அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு லிட்டர் குளிரூட்டும் நிலையம் அமையும் என்பதைப் பொறுத்து செலவும் வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வைக்கம் நகரில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம்.

***5788. திரு. மு. இராமநாதன் :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தந்தை பெரியாருக்கு கேரளத்தில் வைக்கம் நகரில் நினைவுச் சின்னம் எழுப்பும் தமிழக அரசின் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கேரள மாநில பொதுப்பணித்துறையின் மூலம் வைக்கத்தில் பெரியார் நினைவகம் கட்டப்படவுள்ளது. தற்போது விரிவான திட்ட மதிப்பீடு கேரள மாநில பொதுப்பணித் துறையிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அவை நமது பொதுப்பணித் துறையால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. நினைவகத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருணாசிரம தர்மம் என்ற பெயரால் தெருவில் நடக்கக்கூட மறுக்கப்பட்ட அந்த ஜாதிக் கொடுமையை எதிர்த்து வைக்கத்தில் போராட்டம் நடத்தி சிறைப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்தவர் தந்தை பெரியார் அவர்கள். ஆகவே அந்த

நினைவு மண்டபத்தில் அவருடைய திருவுருவச் சிலையை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ? அங்கே அமைக்கப்படக் கூடிய மண்டபம் எவ்வளவு நிலப்பரப்பில் அமைக்கப்பட இருக்கிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கத்தில் பெரியார் நினைவகம் அமைப்பதற்கு கேரள அரசு நமக்கு 71.575 சென்ட் நிலம் அங்கே தந்திருக்கிறது. அதன் மொத்த மதிப்பீடு நம்முடைய பொதுப் பணித்துறையால் ஆய்வு செய்யப்பட்டு 14 இலட்சம் ரூபாய் அந்த பொதுப் பணித்துறையிடம் நாம் பணமாகக் கட்டிய பிறகு அவர்கள் வேலையை முடித்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த கேரள மாநில பொதுப் பணித்துறை ஆய்வு செய்து 15 இலட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

(9-55 மணி)

நமது பொதுப் பணித்துறை அதைப்பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. திருவுருவச் சிலையைப் பொருத்தவரையில், அங்கு இருக்கின்ற நினைவகம் அமைப்பது மட்டும்தான் கேரள பொதுப்பணிக் துறையின் வேலை தவிர, நமது மாநில அரசின் சார்பாக இங்கு இருக்கின்ற சிற்பிகளை வைத்து பெரியார் அவர்களுடைய சிலையை அங்கு நிறுவுவதற்கு அரசு முடிவு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறப்புக்கும் எல்லா உயிருக்கும் என்றும், தலைசாயா தன்மான சிங்கமாக 96 வயது வரை வாழ்ந்து பகுத்தறிவு பாப்பியவர் தந்தை பெரியார் அவர்கள். ஆகவே, அந்த வைக்கத்திலே அமைக்கக் கூடிய நினைவகத்தில் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றையும், சாதிமத தர்மம், ஜாதிக் கொடுமையை எதிர்த்து அவர் செய்து வந்த பிரச்சாரத்தையும், கல்வெட்டுகளாக, அவர்களுடைய பொன் மொழிகளை சித்தரிக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை அரசு ஆலோசனைச் செய்யும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வைக்கம் வீரர் தந்தைப் பெரியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படுகிறபோது, பெரும் தலைவர் காமராஜர் அவர்களுடைய வாழ்க்கையிலே முதன் முதலாக அவர்களுடைய

தலைமையிலேதான் பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் அந்த வைக்கம் போராட்டத்திலே கலந்து கொண்டார்கள். தந்தைப் பெரியார் தளபதியாக செல்லுகிறபோது அவர்களுக்கு தக்க துணைவராக காமராஜ் அவர்கள் இளம் வயதிலேயே சென்றார். அப்பொழுது திருவனந்தபுரத்திலே உறவினருடைய கடையிலே பணிபுரிந்து கொண்டிருந்த காரணத்தினாலே சென்றார். செல்லு கிறபோது பாரதியாருடைய பாடல், அச்சமில்லை, அச்சமில்லை என்று பாடுகிறபோது மேல் ஜாதிக்காரர்கள் அங்கே நின்று, எந்தா, இய்யால், அச்சமில்லை, அச்சமில்லை என்று பரையிது, என்று கிண்டல் கூட செய்தார்களாம். எனவே, தந்தைப் பெரி யார் அவர்களுக்கு அந்த நினைவுச் சின்னம் எழுப்புகிறபோது அங்கே வரலாற்றுச் செய்திகளை வைத்து, பெரும் தலைவரை பச்சை தமிழன் என்று எந்த காமராஜரை குறித்திருக்கிறாரோ, அந்த பச்சை தமிழனே அவர்களுக்கு துணையிருந்தார் என்பது சரித்திரத்திலே முக்கியமான இடத்தை பெறும், அது செய்யப் படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காங்கிரஸ் இயக்க வரலாற்றில், திராவிட இயக்க வரலாறு இடம் பெறுமோ, பெறாதோ தெரியாது. ஆனால் திராவிட இயக்க வரலாற்றில் காங்கிரஸ் இயக்க வரலாறு நிச்சயமாக இடம் பெறும். காமராஜருடைய வரலாற்றில் பெரியாருடைய வாழ்க் கைக் குறிப்பு இடம் பெறுகிறதோ பெறவில்லையோ எனக்குத் தெரியாது, ஆனால் பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றில் காமராஜருடைய வாழ்க்கை வரலாறு நிச்சயமாக இடம் பெறும் (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. குமரி அனந்தன்: மிக்க மகிழ்ச்சி. ஆனால் வைக்கம் போராட்டம் நடக்கிறபோது தந்தை பெரியார் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் காலம் கடந்துதான் இதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறீர்கள். (சிரிப்பு)

கால்நடை மருத்துவமனை.

*3118. **திரு. வி. பி. இராசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இராசபாளையம் தொகுதி சொக்கநாதன் புத்தூரில் கால் நடை மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?